**செய்தி வெளியீடு எண்: 604** **நாள் : 27.11.2014**

**செய்தி குறிப்பு**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் அனைத்து தரப்பினரையும் விளையாட்டுக்களில் ஈடுபடுத்திடவும் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை ஊக்குவிக்கவும், பல விளையாட்டு மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்திட ஆணையிட்டுள்ளார்கள். இதனைத் தொடர்ந்து, தமிழகத்தில் அரசுப் பணியாளர்களின் மன அழுத்தத்தினை குறைக்கவும் அவர்களை விளையாட்டில் ஈடுபடுத்திட ஊக்குவிக்கும் வகையில் அரசுப் பணியாளர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்திட ஆணையிடப்பட்டது. இதில், தடகளம், கூடைப்பந்து, கையுந்துபந்து, கால்பந்து (ஆண்கள் மட்டும்), கபடி, டென்னிஸ், மேசைப்பந்து மற்றும் இறகுப்பந்து விளையாட்டுக்களில் (இருபாலருக்கும்) தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து மாநில அளவிலான அரசுப் பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் 27.11.2014 முதல் 29.11.2014 வரை சென்னையில் நடைபெறுகின்றன.

மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்திட ஒரு மாவட்டத்திற்கு தலா ரூ.50,000.00 வீதம் 32 மாவட்டங்களுக்கு ரூ.16.00 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு நடத்தப்பட்டன. இப்போட்டிகளில், 11,192 வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டார்கள். மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்திட ரூ.20.00 லட்சமும் அகில இந்திய அரசுப் பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்பவர்களுக்கு மூன்று நாட்கள் பயிற்சி முகாம் நடத்தி, போட்டிகளில் கலந்து கொள்வதற்காக ரூ.4,36,600.00 – வீதம் மொத்தம் ரூ.40,36,600.00 அரசு மான்யமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ் விளையாட்டுப் போட்டியின் துவக்க விழா 27.11.2014 இன்று காலை 11.00 மணிக்கு நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. அவ்வமயம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய பொதுமேலாளர் (பொ) திரு.வி.ஆர்.நியூபிகின் செல்லப்பா அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அரசு முதன்மைச் செயலர் திரு.முகம்மதுநசிமுத்தின், இ.ஆ.ப. அவர்கள் சிறப்புரையாற்றினார்கள். மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் அவர்கள் சிறப்புரையாற்றி போட்டியினை துவக்கி வைத்தார்கள். மேலும், இதில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு.ஷம்புகல்லோலிக்கர், இ.ஆ.ப. அவர்கள் கலந்து கொண்டார்கள். மேலும், இந்த மாநில அளவிலான அரசுப் பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் தமிழத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் 3,226 விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் அணி மேலாளர்கள் கலந்து கொள்ள பதிவு செய்துள்ளார்கள்.

இதனைத் தொடர்ந்து, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் தடகளம், கையுந்துப்பந்து, கால்பந்து மற்றும் மேசைப்பந்து விளையாட்டுப் போட்டிகளும், நேரு உள் விளையாட்டரங்கில் கபடி, கூடைப்பந்து மற்றும் இறகுப்பந்து விளையாட்டுப் போட்டிகளும், டென்னிஸ் விளையாட்டரங்கில் டென்னிஸ் போட்டிகளும் நடைபெறும்.

மேலும், இந்த மாநில அளவிலான அரசுப் பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு முதல் மூன்று இடங்களைப் பெறும் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு பதக்கங்கள், சான்றிதழ்கள் மற்றும் கோப்பைகள் 29.11.2014 அன்று மாலை 6.00 மணிக்கு மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு.எஸ்.சுந்தரராஜ் அவர்களால் வழங்கப்படவுள்ளன.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**